# 1971 வெற்றியைப்போல் 2026லும் வெற்றியே!

ஒருவழியாக முருகன் பெயரில் ஆர்.எஸ்.எஸ் போர்வையில் பா.ஜ.க மதுரையில் மாநாட்டை நடத்தி முடித்துள்ளது. தமிழ்நாடு பா.ஜ.க. புதிய தலைவரின் சாதனை என்றே கூட இதனைக் கூறலாம். ஏனென்றால் அண்ணாமலை எப்பொழுது புதிய தலைவருக்கு ஆப்பு அடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறார். 300 என்றும் 500 என்றும் கொடுத்து அழைத்துவரப்பட்டவர்கள்தான் வந்தவர்களில் அதிகமென்று பத்திரிக்கைகள் பல செய்தி வெளியிட்டிருந்தனர். ஒட்டுமொத்த பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்களும் வந்து குவிந்து விட்டார்கள். அப்படி இருந்தும் எதிர்பார்த்த கூட்டம் இல்லை என்ற ஏமாற்றம் அவர்களுக்கு பெரிய வருத்தமாகவே இருக்கிறதாம்.

பா.ஜ.க புதிய தலைவர் அ.தி.மு.கவில் அமைச்சராக இருந்தவர். பலமுக்கியபொறுப்புகளிலும் இருந்தவர். அப்போது திருநெல்வேலியில் நடந்த மாநாட்டில் நடத்தப்பட்ட பேரணி முடிய இரண்டு நாட்கள் ஆனதை அவரே பார்த்திருப்பார். அதேபோல் பிரதமர் வி.பி.சிங் சென்னை வந்த போது தி.மு.க நடத்திய பேரணி முடிய இரண்டு நாட்கள் ஆனது. இன்றைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்து அந்த ஊர்வலத்தில் லட்சக்கணக்கான இளைஞர்களோடு நடந்து வந்ததையும், கடைப்பிடித்த கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் பார்த்து வி.பி.சிங் புளங்காகிதம் அடைந்ததையும் போற்றி எழுதாத பத்திரிக்கைகளே இல்லை எனலாம்.

இவையெல்லாம் பா.ஜ.க புதிய தலைவருக்கு தெரிந்திருக்காமல் இருக்க முடியாது. மதுரையில் நடந்த பா.ஜ.க அரசியல் மாநாட்டை அவர் மனம் நிச்சயம் பெரிய மாநாடாக ஏற்றுக் கொள்ளாது. சேராத இடந்தனிலே சேர்ந்து விட்டார். வெற்றி மாநாடு என்று வீம்புக்காவது பேசித் தானே ஆக வேண்டும். அண்ணாமலை எங்கே ஓட்டை தெரியும், அங்கே வைக்கலாம் வேட்டு! எப்படி சாய்க்கலாம் புதிய தலைவரை என்ற ஒரே நோக்கத்தோடு திரிகிறாரே!

ஜெயலலிதா அம்மையார் அவர்கள் பா.ஜ.க.வுடன் இனி கூட்டணியே வைக்க மாட்டேன் என்ற போதும் "லேடியா அல்ல மோடியா" என்று கேட்டபோதும் இவரும் அ.தி.மு.க.வில்தான் இருந்தார். அம்மையார் தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் எப்படி மதித்தார் என்பதும் புதியவருக்குத் தெரியாதா?

திராவிட இயக்கம் என்றால் அதன் தலைவர்கள் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர்தான் என்பது உலகம் அறிந்ததாயிற்றே! அப்படி இருந்தும் தந்தை பெரியாரையும் அறிஞர் அண்ணாவையும் இழிவுபடுத்தி வீடியோ வெளியிட்டது புதியவருக்கு தெரியாமல் நடந்திருக்குமா? நிச்சயமாகத் தெரிந்திருக்கும். தெரிந்தும் அதை ஏன் ஒளிபரப்ப அனுமதித்தார்? திராவிடம் இல்லையென்றால் புதியவர் அமைச்சராகி இருக்க முடியாதே! இதை ஏன் மறந்தார்? புதியவரே இனி மேலும் இப்படிப்பட்ட செயலை அனுமதிக்காதீர். நடந்து வந்த பாதையை சற்றுத் திரும்பிப் பாருங்கள். செயல்படுங்கள்.

திராவிட இயக்கப் படிக்கட்டுகளில் ஏறி உயரம் தொட்டவர்கள் நீங்கள். கருப்புச் சட்டை போட வேண்டும் என்று உங்களை வற்புறுத்தவில்லை. ஆனால் நீங்களோ காவிச் சட்டை அணிந்து கொண்டு தப்பாட்டமாக முருகன் பெயரில் கரகாட்டம் ஆடுகிறீர்களே இது நியாமா?



**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணி செயலாளர்*

இந்த மாநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை உத்தரவிட்டது. ஆனால் மாநாடு முழுக்க முழுக்க அரசியல் மாநாடாகத்தான் இருந்தது.

நீதிக்கட்சித்தான் கோவில்களை வைத்து சிலர் அடித்தக் கொள்ளையை உணர்ந்து இந்து அறநிலையத் துறையை உருவாக்கியது. அத்துறை அரசிடம் இருக்கக் கூடாது என்று ஓர் தீர்மானம். முருகன் சொத்தைத் திருடி முருகனுக்கே மொட்டையடிக்க திட்டமா?

தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை கோவில் நிதியில் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் கட்டக் கூடாது என்றொரு தீர்மானம். அப்படி செய்து பலர் கல்வி கற்பதும் மக்களின் உடல் நலத்திற்கும் அவைகள் உதவுவதும் அரசு செய்து வரும் மக்கள் நலன் சார்ந்த காரியங்கள் ஆயிற்றே! இது ஏன் கூடாது? உண்டு கொழுத்து உடல் வளர்க்கும் பா.ஜ.க கூட்டத்திற்கு உதவவா? இது மக்களால் வெறுக்கப்படும் தீர்மானம் மட்டுமல்ல; உண்மையில் முருகக் கடவுள் இருந்தால் அவராலும் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது?

உங்களைப் பொறுத்தவரை முருகன் தமிழ்க் கடவுள். ஆனால் அவருக்கு நடக்கும் அர்ச்சனை தமிழில் மந்திரம் சொல்லி நடத்தப்படுகிறதா? தேவபாஷை என்று சமஸ்கிருதத்தில் தானே நடத்தப்படுகிறது. நீசப்பாஷை என்று தமிழில் அர்ச்சனை நடத்தப்படுவதில்லையே! தமிழ் நீசப்பாஷை என்றால் தமிழ்க் கடவுள் முருகனும் நீசக்காரர்தானே! அவன் அப்பன் சிவனும் நீசக்காரர்தானே! முருகனுக்கு தமிழில்தான் அர்ச்சனை நடத்தப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை ஏன் உங்களால் போட முடியவில்லை. முடியாது? ஆர்.எஸ்.எஸ் அதை கண்டிப்பாக அனுமதிக்காது.

தி.மு.க ஆட்சியை முருகர் பார்த்துக் கொள்வாராம் என்று பேசியுள்ளார்கள். முருகன் நன்றாக தமிழக அரசையும் செயலையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். திருச்செந்தூரில் வரும் 7ம் தேதி முருகர் கோயிலுக்கு குடமுழுக்கு மற்றும் திருப்பணிகள் நடத்த ரூ.400 கோடியை நம் முதல்வர் தளபதி அவர்கள் தந்துள்ளார்கள். பழனி முருகன் கோயில் உள்பட 117 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திருத்தணி முருகன் கோயில் ரூ.86 கோடியில் திருப்பணியும், பழனியில் முருகருக்கு ரூ.98 கோடியிலும் திருப்பணிகளும் நடைபெற்று வருகிறது.

அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடுகள் அல்லாத 143 முருகன் கோயில்களுக்கு ரூ.1085 கோடி முதல்வர் ஒதுக்கித் தந்து 884 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சை சுவாமிமலையில் ரூ.5 கோடி செலவில் மின்தூக்கி அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு உதவும் பணி நடைபெற்று வருகிறது. 7000 ஹெட்டேருக்கு மேல் கோயில் நிலங்கள் அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு கோயிலுக்கு தரப்பட்டுள்ளது. இப்படி எத்தனை எத்தனையோ தமிழ்க் கடவுள் முருகனுக்கு செய்யப்பட்டு வருகிறது. இதெல்லாம் மக்களுக்கு நன்கு தெரியும். ஆனால் உங்களுக்குத் தெரியாமல் ஆட்சியை முருகர் பார்த்துக் கொள்வார் என்று சாபமிடுகிறீர்களே! இப்பொழுது சொல்லுங்கள் தமிழ்க் கடவுள் முருகன் யார் பக்கம் இருப்பார்? வடவர் அமித்ஷா பக்கமா? தமிழர் நம் முதல்வர் பக்கமா?

இந்துக்களின் உணர்வுகளை காயப்படுத்தியே கட்சி நடத்துகிறார்களாம். சமநீதி பேசுபவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்க வேண்டுமாம். தமிழ் மக்களை முருகர்தான் காப்பாற்ற வேண்டுமாம். கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகளிலிருந்து மக்களை முருகர்தான் மீட்க வேண்டுமாம். பொய்களையும் புரட்டுகளையும் கூறி மக்களை மாயவலையில் சிக்க வைத்திருக்கிறோமாம். மாநாட்டுக்கு வந்தவர்களை விமர்சித்திருப்பது மாபெரும் குற்றமாம். என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள்.

சமநீதி என்றால் என்ன? நம்முதல்வர் விரும்புவது சமூகநீதியைத் தான். மதத்திற்கு அப்பாற்பட்டு மக்கள் அனைவரும் ஒன்று தானே! பிறகு இந்து மாநாட்டுக்கு எங்களை ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? மதத்தால் மக்களைப் பிரித்தால் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமா? பொய், புரட்டு, பாலியல் வன்கொடுமையாம் அதுவும் தமிழ்நாட்டிலாம்! ஆஹா எவ்வளவு பெரிய உண்மையைக் கூறி இருக்கிறார்கள்.

பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக சில நாட்களுக்கு முன்பு தமிழக பா.ஜ.க. உறுப்பினர் ஒருவர் கடுமையான குற்றச்சாட்டுக்கு ஆளானதை மறந்து விட்டீர்களா? சிறுபான்மையினருக்கு எதிராக பா.ஜ.க செய்த அக்கிரமத்திற்கு பில்கிஸ்பானு வழக்கு ஒன்று போதாதா? பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் தலித் மக்கள் எவ்வளவு அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை மாநில வாரியாகப் பட்டியலில் இட வேண்டுமா?

பில்கிஸ்பானு வழக்கில் கைது செய்து சிறையில் இருந்த பா.ஜ.கவினரை முன்கூட்டியே விடுதலை செய்ததோடு அவர்கள் என்னவோ சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போல அமைச்சரே மாலை அணிவித்து வரவேற்றதை நியாயம் என்று பா.ஜ.க.வினரே கூறுகிறீர்களா? அப்படி விடுதலை செய்யப்பட்டவர்களை உச்சநீதிமன்றம் தலையிட்டு மீண்டும் சிறையிலடைத்ததை உங்கள் முகத்தில் கரிபூசியதை மறுக்க முடியுமா? நீங்களா சமநீதியைப் பற்றிப் பேசுவது?

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களுக்கு பின் முதல்வர் ஆனவுடன் ஓடாமல் இருந்த திருவாரூர் தேரோட தஞ்சை பெரியார் என்றழைக்கப்பட்டு மன்னை நாராயணசாமி அவர்களை வைத்து ஓட வைத்த வரலாறு உங்களுக்கு தெரியுமா? தற்போதைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்களும் அதே தேரை ஓட வைத்து அதில் இரண்டு அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.கே.சேகர்பாபுவை கலந்து கொள்ள செய்ததையாவது நினைவில் வைத்துள்ளீர்களா?

தி.மு.க கொள்கையாக அறிஞர் அண்ணா அறிவித்ததே ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது தான். தி.க கொள்கையே கடவுள் மறுப்பு கொள்கை. ஜாதியால் மதத்தால் மக்கள் பிளவுபட்டு சண்டைப் போட்டுக் கொள்ளாததே எங்கள் கொள்கை. இவைதான் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகியோரின் கொள்கை ஆகும். எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்" என்பது தமிழக முதல்வரின் விருப்பம்.

மாநாட்டிற்கு வந்தவர்களை யார் விமர்சித்தார்கள்? நீதிமன்ற வழிகாட்டுதலை மீறி அரசியல் மாநாடாக ஆக்கி விட்டீர்களே என்றுதான் கூறினார். திராவிடத்தை, அண்ணாவை, பெரியாரை, கலைஞரை ஏன் விமர்சித்தீர்கள்? இது அரசியல் இல்லையா?

அதில் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் சிலர் கலந்து கொண்டு சிரித்து கைத்தட்டிக் கொண்டிருந்ததை தொலைக்காட்சியில் காட்டியதை தமிழ்நாடே பார்த்ததே! இது மறுக்க முடியுமா? தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவை விமர்சித்த பிறகு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளியேறி இருக்க வேண்டாமா? அண்ணா தி.மு.க. என்று கட்சியில் எப்படி அவர்களால் இருக்க முடிகிறது? இதை விடக் கொடுமை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்திற்கு ஒரு அமைச்சர் வெள்ளிவேல் (முருகன் வேலாம்) பரிசளித்திருக்கிறார். இதுதான் திராவிட இயக்கச் செயலா? எடப்பாடியாராவது பெரியார், அண்ணாவை பேசியதை கடுமையாக இல்லையென்றாலும் கண்டித்திருக்கிறார். அதற்குப் பிறகும் வெள்ளிவேல் பரிசென்றால் எடப்பாடியார் கட்டுப்பாட்டில் கட்சி இல்லையா?

ஆர்.எஸ்.எஸ். பற்றி எம்.ஜி.ஆர். கூறியுள்ளதை பாருங்கள்: தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். தனது பயிற்சியை நிறுத்திக் கொள்ள வேண்டும். அந்தப் பயிற்சி தேவையில்லை. இந்து முன்னணி பேரணியால் நாட்டுக்கு நன்மையா? இந்து முன்னணிக்காரர்களுக்கு யோசனைச் சொல்லும் மடாதிபதிகளுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது போன்ற செயல்களை அரசு அனுமதிக்காது. போதுமா? இதற்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ் மாநாட்டிற்கு நீங்கள் எப்படி சென்றீர்கள்? எம்.ஜி.ஆரின் இந்தப் பேச்சு நீங்கள் அறிந்திடாதது என்பதுதானே சரி.

1971ல் சேலத்தில் ராமர் படத்தை வைத்து ஊர்வலம் போனார்கள். அதற்கு தந்தை பெரியார் கருப்புக் கொடி காட்டினார். உடனே ஊர்வலத்தினர் அய்யா மீதும் தி.க.வினர் மீதும் செருப்பை வீசினர். வீசியச் செருப்பை எடுத்து ஊர்வலத்தினர் மீது திரும்ப வீசினார்கள். இதில் ஒரு செருப்பு ராமர் படத்தின் மீது விழுந்தது என்று புரளியைக் கிளப்பி விட்டு துக்ளக் பத்திரிகையும் அதனை பெரிதுபடுத்தி எழுதியது. அப்போதைய தேர்தலில் பெரியார் பிரச்சாரத்திற்கு செல்லவில்லை. ராமர் தி.மு.கவிற்கு தண்டனை கொடுப்பார் என்றார்கள். ஆனால் தேர்தல் முடிவோ தி.மு.க. 184 இடங்களில் வெற்றி பெற்றது. அந்த வெற்றியை முறியடிக்க இதுவரை யாராலும் முடியவில்லை.

ஏன் இதனை குறிப்பிடுகிறோ மென்றால் ராமரே எங்களுக்குத்தான் உதவி இருக்கிறார். தமிழ் கடவுள் முருகனா எங்களை தண்டிக்கப்போகிறார். என்ன தவறு செய்தோம் தண்டிப்பதற்கு! 2026 தேர்தலிலும் தி.மு.க.தான் வெற்றி பெறும். அண்ணன் தளபதி அவர்கள்தான் மீண்டும் முதல்வராக அமர்வார்.

ஊழலைப் பற்றிப் பேசுகிறார்கள். சி.ஏ.ஜி அறிக்கையில் ரூ.7.5 லட்சம் கோடி ஊழல் நடந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. ரபேல் ஊழல், டெல்லி துவாரகா சாலை போடுவதில் 1 கி.மீக்கு ரூ.18 கோடி என்றிருக்க ரூ.200 கோடி என்று கணக்கு காட்டியது யார்? ஊழலுக்கு சில சான்றுகளைத்தான் தந்துள்ளோம்.

பா.ஜ.க.வினருக்கு இத்தருணத்தில் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்கிறோம். ஆப்ரேஷன் சிந்துார் என்ற பெயரில் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்காக அந்த தீவிரவாதி முகாம்களை பாகிஸ்தானுக்குள் 100 கி.மீ.வரை ஊடுருவிச் சென்று இந்திய ராணுவம் தாக்கியது. அதில் 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. அந்த தாக்குதலை முதல் முதலாக ஆதரித்தவர் தமிழ்நாடு முதல்வர்தான். பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதலிலும் அப்பாவி நம்மக்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆனால் திடீர் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் போர் நிறுத்தப்பட்டது என்று அறிவித்தார். உண்மையில் அறிவிக்க வேண்டியவர்கள் இந்தியாவோ அல்லது பாகிஸ்தானோதான்.

டிரம்பின் அறிவிப்பிற்கு பிறகு போரும் நிறுத்தப்பட்டது. பிரதமர் மோடி என்ன சொன்னார்? டிரம்ப் சொல்லி போர் நிறுத்தப்படவில்லை. பாகிஸ்தான் பிரதமரும் இராணுவ தளபதியும் கெஞ்சிக் கேட்டதால் தான் போரை நிறுத்தினோம் என்றார். ஆனாலும் டிரம்ப் திரும்பத் திரும்ப 18 முறை போரைத் தான்தான் நிறுத்தியதாக கூறிக்கொண்டே இருந்தார்.

ஜி–7 மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக சென்ற பிரதமர் மோடியை டிரம்ப் சந்தித்து பேசுவதை தவிர்த்தார். ஆனால் பாகிஸ்தான் ராணுவத் தளபதிக்கு விருந்து வைத்து மகிழ்ந்தார். பொதுவாக இப்படி விருந்து வைக்கும் பழக்கம் அமெரிக்காவுக்கு இல்லை. அதன் பின் மோடியே தொலைபேசியில் தொடர்பு கொண்டு டிரம்பிடம் அரை மணி நேரம் பேசினார் என்று கூறப்பட்டது. பேசினாரா கெஞ்சினாரா என்பது அயோத்தி ராமருக்குத்தான் தெரியும்.

இதற்காக நாடளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி விளக்கம் தர வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கேட்டால் கூட்ட மறுக்கிறார். இதே போல் 1962 சீனா யுத்தத்தின் போது சிறிய கட்சியைச் சேர்ந்த வாஜ்பாய் பிரதமர் நேருவிடம் யுத்தம் பற்றி விவாதிக்கக் கோரினார். நாடாளுமன்றம் கூட்டப்பட்டது விவாதம் நடத்தது. இப்படி முன் உதாரணம் இருக்க பிரதமர் மோடி அப்படி செய்ய ஏன் மறுக்கிறார். அதில் உள்ள மர்மம் என்ன?

ஜி7 நாடுகளில் ரஷ்யாவையும் சீனாவையும் சேர்க்க வேண்டும் என்று கூறிய டிரம்ப் மிகப் பெரிய ஜனநாயக நாடாக உலகின் 4வது பொருளாதார நாடாக இருக்கும் இந்தியாவை சேர்க்கச் சொல்லாது ஏன்? இதற்குப் பெயர்தான் மோடி கூறும் நல்உறவா? ஆனால் பாகிஸ்தான் பிரதமர் அடுத்த நாளே டிரம்புக்கு நோபல் பரிசு தரவேண்டும் என்கிறார்.

இதில் என்ன நடந்தது என்ற உண்மையை பிரதமர் மோடியும் கூற மறுக்கிறார் டிரம்பும் திரும்பத் திரும்ப மாற்றிப் பேசுகிறார். 140 கோடி இந்திய மக்கள் ஏதும் அறியாது நிற்கிறார்கள். அரசியல் மாநாடு நடத்திய திடீர் முருகர் பாச பா.ஜ.க.வினரே நீங்களாவது உண்மையைக் கேட்டு இந்திய மக்களுக்கு தெரிவியுங்கள். ஆனால் ஒன்று இந்தியாவோடு மற்ற நாடுகள் (குறிப்பாக பாகிஸ்தான்) நடத்திய போர்களில் எல்லாம் அமெரிக்கா பாகிஸ்தானுக்குத்தான் ஆதரவு தந்துள்ளது. சோவியத் யூனியன் (ரஷ்யா உட்பட) இந்தியாவுக்கு ஆதரவு தந்துள்ளது. இது கடந்த கால வரலாறு.

**பாசமுள்ள பார்வையிலே கடவுள் வாழ்கிறான்**
**அவன் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறான்"**

இது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பட பாடல். எங்கள் முதல்வரிடம் பாசமும் கருணையும் உள்ளது. பிறகு என்ன தமிழ்நாடு மக்களும் முருகரும் 2026 தேர்தலிலும் எங்கள் முதல்வர் பக்கம்தான்.



நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை தெற்கு மாவட்ட பா.ஜ.க.ஐ.டி விங் துணைத் தலைவர் மகேஷ் வில்சன் தலைமையில் 50 பேர்கள் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையை ஏற்று கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் சுடலைக்கண்ணு மற்றும் புஷ்ப பாண்டி, சங்கர், குமார், உதயகுமார், ராபின், சுபாஷ், வர்கிஸ், முத்து,பரமசிவம் ஆகிய கழக உடன் பிறப்புகள் உள்ளனர்.

### நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்

## ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் BDA பயிற்சி கூட்டம்!

### அமைச்சர் சி.வி.கணேசன் – சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. – பா.துரைசாமி பங்கேற்பு!

*கடலூர், ஜூலை 1 -* கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் ஓரணியில், தமிழ்நாடு மற்றும் BDA (பூத் டிஜிட்டல் ஏஜென்ட்) நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நெய்வேலி ஆர்ச் கேட், கே.என்.டி மஹாலில் 28.6.2025, சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகளுக்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆலோசனைகளை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ப.சுரேஷ் ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணியின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, எதிர்கால திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டத்தில், முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், நெய்வேலி நகரச் செயலாளர் வி.குருநாதன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் அ.குணசேகரன், பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.சந்தோஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ராஜேஷ், தலைமை பொதுக் குழு உறுப்பினர் க.அறிவழகன், அவைத் தலைவர்கள் . ராஜா, வீர ராமச்சந்திரன், நன்மாறபாண்டியன், பண்ருட்டி தெற்கு ஒன்றிய துணை செயலாளர்கள் சுமதிநந்த கோபால், செல்வகுமார், மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், கே.எம். கே.ஜெகநாதன், தொமுச பொருளாளர் அப்துல் மஜீத், ஜனார்தனன், ஞானசேகரன்,சுந்தரவடிவேல்,ஒன்றிய பொருளாளர் ஜோதி, துணை செயலாளர் ஏழுமலை, இளைஞரணி அமைப்பாளர் பாக்யராஜ், இலங்கேஸ்வரன் , வழக்கறிஞர் அரிதாஸ், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் தர்மலிங்கம்,ஆனந்தன், குமார், சந்தியா, , பாலகிருஷ்ணன், சோழன், ராமதாஸ், பிரசன்னா, ரவி காந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

## தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### ஈ.ராஜா எம்.எல்.ஏ. – கலைகதிரவன் – நௌஷாத் – கணேஷ்குமார் – தனுஷ் எம்.குமார் பங்கேற்பு!

*தென்காசி, ஜூலை 1 -* தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் தென்காசியில் உள்ள தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர்கள் சுந்தர மகாலிங்கம் (தெற்கு) கோ.சுப்பையா (வடக்கு) ஆகியோர் தலைமையில், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர்கள் கலைக்கதிரவன் (தென்காசி) நௌஷாத் (கடையநல்லூர்)கணேஷ் குமார் ஆதித்தன் (ஆலங்குளம்) தனுஷ் எம் குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று "ஓரணியில் தமிழ்நாடு"என்ற கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி தேர்தல் நேரத்தில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்றும், இல்லங்களை தேடி சென்று பாக முகவர்கள் மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் செயல்படும் விதம்,புதிய உறுப்பி னர் சேர்க்கையை தீவிரப் படுத்துவது குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினார். அதனை தொடர்ந்து புதிய உறுப்பினர் சேர்க்கை படிவத்தினை கழக நிர்வாகி களிடம் வழங்கினார்.

நிகழ்வில் தெற்கு மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி,தமிழ்ச்செல்வன், தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, ஆறுமுகச்சாமி, முத்துப்பாண்டி, சேசுராஜன், ஷேக்தாவூது, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, ரஹீம், தமிழ்ச்செல்வி, சமுத்திர பாண்டியன், ராஜேஸ்வரன், கதிர் வேல் முருகன், ரவிச்சந்திரன், அருள், ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ரவிசங்கர், திவான் ஒலி, மாரிவண்ண முத்து, மகேஷ்மாயவன், செல்லத்துரை, அன்பழகன்,

சீனித்துரை, சிவன் பாண்டியன், ஜெயக்குமார், சுரேஷ், ஜே.கே. ரமேஷ், பொன் செல்வன், சொக்கம்பட்டி மணிகண்டன், குமார், சமுத்திர பாண்டியன், வழக்கறிஞர் சிவக்குமார், ஜெயா, நகர செயலாளர்கள் சாதிர், அப்பாஸ், வெங்கடேசன், கணேசன், பேரூர் செயலாளர்கள் சுடலை, குட்டி, முத்தையா, லட்சுமணன், நெல்சன், ஜெகதீசன், ராஜராஜன், கோபால், வெள்ளத்துரை, சிதம்பரம், முத்து, பண்டாரம்,அழகேசன், முகமது உசேன் மற்றும் வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, மாவட்ட பொருளாளர் சரவணன், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி, தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன்,பரமகுரு, பொதுக் குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன், தேவதாஸ், சாகுல் ஹமீது, மாரிச்சாமி,

பி.மாரிச்சாமி, பராசக்தி,மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், பொன். முத்தையா பாண்டியன், கடற்கரை, பூசை பாண்டியன், சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை, பால்ராஜ், குணசேகரன், நகரச் செயலாளர்கள் அந்தோணிசாமி பிரகாஷ், நாகூர் கனி, பேரூர் செயலாளர்கள் குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் தெற்கு மாவட்டப் பொருளாளர் ஷெரீப் நன்றியுரை யாற்றினார்.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பிறகு அவரது ஆட்சியின் செயல்பாடுகளை பார்த்து பல்வேறு மாற்றுக் கட்சியை சேர்ந்த ஏராளமானோர் தொடர்ந்து தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு மண்டலத் தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி ஏற்பாட்டில் நாகர்கோவில் மாநகரப் பகுதியில் உள்ள மாற்றுக் கட்சியை சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட இளைஞர்களும், மாணவர்களும் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். வழக்கறிஞர் ப.ஆனந்த், ஐ.கேட்சன், ஆர்.சதாசிவன், மோ.பிராங்கிளின், இ.ஜவகர் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.